தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6
ந.க.எண். 28338/பிடி2/இ1/2012 நாள். 29.6.2012

===

பொருள் பள்ளிக் கல்வி– அரசு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள்– ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நடவடிக்கைகள் சார்ந்து சில அறிவுரைகள் வழங்குதல் – குறித்து.

அரசு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் சமுதாயத்தில் பல்வேறு நிலையில் உள்ள மாணவர்களும் மாணவிகளும் ஒருங்கே சமநிலையில் கல்வி பயில்கின்றனர். பள்ளிகளில் அம்மாணவ மாணவிகளுக்கிடையே எவ்விதமான ஏற்றத்தாழ்வும் உருவாகும் நிலையைத் தவிர்க்கவும், அனைவரும் சமநிலையில் உள்ளவர்கள் என்ற சமத்துவ மன நிலையை மாணவ மாணவிகளின் உள்ளங்களில் உருவாக்கவும் அனைத்து நிலையில் உள்ள மாணவ மாணவிகளுக்கும் ஒரே மாதிரியான சீருடை வழங்கப்பட்டு, பள்ளிக்கு மாணவ மாணவிகள் சீருடையில் வரும் முறை நீண்டகாலமாக பின்பற்றப்பட்டு வருகிறது.

மாணவ மாணவிகளுக்கு நல்லதோர் முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் செயல்பட வேண்டிய உன்னதமான ஆசிரியப் பணியில் உள்ள ஆசிரியர்களும் ஆசிரியைகளும் பள்ளிக்கு வரும்போது தங்களது ஆடை மற்றும் அணிகலன்களை அணிந்து வரும் முறையில் தமது பதவிக்குரிய கண்ணியமும், நமது பண்பாட்டிற்கும், கலாச்சாரத்திற்கும் உகந்த நாகரீகமும் இருத்தல் மிகவும் அவசியமான ஒன்றாகும். ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் கண்ணியக் குறைவாகவும், மாணவ மாணவிகளிடையே ஏற்றத் தாழ்வையும், மனச் சலனத்தையும், தாழ்வு மனப்பான்மையையும், மரியாதைக் குறைவையும் ஏற்படுத்தக் கூடிய வகையில் உடையணியும் முறை தவிர்க்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி சுற்றறிக்கைகள் மூலம் அறிவுரைகள் இவ்வியக்ககத்திலிருந்து ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளபோதிலும், சமீப காலங்களில் இவ்வறிவுரைகள் ஆங்காங்கே சில ஆசிரியர்களால் முறையாக கடைபிடிக்கப்படுவதில்லை என்பது இயக்குநரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்நிலை மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும்.

பள்ளி மாணவ மாணவிகளிடம் பாதிப்பையும், சமூதாயத்தில் பொது மக்களிடையே அதிருப்தியையும் ஏற்படுத்தக்கூடிய இத்தகைய நிலை வருங்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும் எனவும், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் பள்ளிக்கு வரும் போது தமது பதவிக்குரிய கண்ணியத்திற்கு சிறிதும் களங்கம் ஏற்படாத வகையிலும், மாணவ மாணவிகளிடையே மேற்குறிப்பிட்ட வாறு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத வகையிலும் ஆடை மற்றும் அணிகலன்களை அணிந்து வருமாறும், அநாகரீகமான முறையில் உடை அணிந்து பள்ளிக்கு வருவதை தவிர்க்குமாறும் அனைத்து பள்ளி ஆசிரியர் மற்றும் ஆசிரியைகளையும் அறிவுறுத்துமாறு ஆய்வு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாணவ, மாணவிகளிடையே அன்பையும், ஒழுக்கத்தையும் வளர்க்கவும் ஆசிரியர்கள் பாடுபடுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்,

பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இதனை கண்காணிக்க வேண்டும் எனவும், மேற்படி அறிவுரைகளைப் பின்பற்றுவதில் தவறுகளோ குறைபாடுகளோ சிறிதும் ஏற்படா வண்ணம் ஆசிரியர்களின் நடவடிக்கைகள் இருப்பதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் தலைமையாசிரியர்களை அறிவுறுத்துமாறும், அனைத்து ஆய்வுஅலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

29/6/12

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்
அரசு முதன்மைச்செயலாளர்,
பள்ளிக் கல்வி துறை, தலைமைச்செயலகம்,
சென்னை–9 அவர்களுக்கு
பணிந்தனுப்பப்படுகிறது.